செ.வெ.எண்:36 நாள்:15.11.2021

**மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப., அவர்களிடம், கிருஷ்ணகிரி அரசு ஆசிரியர் பயிற்சி பள்ளி வளாகத்தில் இயங்கி வரும் மாதிரி பள்ளியில் பயிலும் மாணவ, மாணவியர்களின் கல்வி பயன்பாட்டிற்காக காவேரிப்பட்டிணம் கே.வி.எஸ் குழுமம் சார்பாக ரூ.5 இலட்சத்து14 ஆயிரம் மதிப்பிலான 50 கையடக்க கணினிகளை, கே.வி.எஸ்.குழுமத்தைச் சேர்ந்த திரு.சீனிவாசன், திரு.சாமிநாதன் ஆகியோர் வழங்கினார்கள்.**

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (15.11.2021) மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப., அவர்களிடம், கிருஷ்ணகிரி அரசு ஆசிரியர் பயிற்சி பள்ளி வளாகத்தில் இயங்கி வரும் மாதிரி பள்ளியில் பயிலும் மாணவ, மாணவியர்களின் கல்வி பயன்பாட்டிற்காக காவேரிப்பட்டிணம் கே.வி.எஸ் குழுமம் சார்பாக ரூ.5 இலட்சத்து 14 ஆயிரம் மதிப்பிலான 50 கையடக்க கணினிகளை (Tab) வழங்கினார்கள்.

இப்பள்ளியில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்பட உள்ள கையடக்க கணினி பைபர் நெட் இணைப்பு வழங்கப்பட்டிருக்கும். இதன் மூலம் மாநில அளவில் பாடத்திட்டங்கள் மற்றும் வினாக்களை நேரடியாக அவர்களே தெரிந்துகொள்ள முடியும். கேட்கப்படும் வினாக்களுக்கு உடனடியாக இணைய வழியாகவே பதில் வழங்க முடியும். மேலும், பாடத்திட்டங்கள் மட்டுமன்றி நீட், ஜே.இ.இ போன்ற தேர்வுகளுக்கு நேரடியாக பயிற்சிகள் பெற முடியும்.

இந்நிகழ்வில் கே.வி.எஸ்.குழுமத்தைச் சேர்ந்த திரு.கே.வி.எஸ்.சீனிவாசன், திரு.சுவாமிநாதன், வருவாய் துறை மற்றும் பள்ளி கல்வித்துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கிருஷ்ணகிரி.**